# அகத்தியம் டியூசன் சென்டர்

10TH

## மன்னார் பாளையம் பிரிவு ரோடு – சேலம்

## காலாண்டுப் பொதுத் தேர்வு – 2022

நேரம் 2:30 மணி தமிழ் ( இயல் 1 முதல் 6 வரை ) மொத்த மதிப்பெண்கள் :100

பகுதி – 1 ( மதிப்பெண்கள் : 15 )

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** **(15×1=15)**

1. 'பெரிய மீசை ' சிரித்தார்– வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?
அ) பண்புத் தொகை ஆ) உவமைத் தொகை இ) அன்மொழித் தொகை ஈ) உம்மைத் தொகை
2. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது____
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்
3. எய்துவர் எய்தோப் பழி – இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்ப்பாடு எது?
அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள் இ) தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு
4. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா
5. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாகஅமைவது ____
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்
6. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ______ இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர்____________
அ) அமைச்சர்,மன்னன் ஆ) அமைச்சர்,இறைவன் இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன்,இறைவன்
7. அருந்துணை என்பதைப் பிரித்தால் ________
அ) அருமை + துணை ஆ) அரு + துணை இ) அருமை + இணை ஈ) அரு + இணை
8. வேர்க்கடலை , மிளகாய்விதை , மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை __________
அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை
9. பாடுஇமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்
10. மலைப்படுகடாம் என்பது எத்தனை அடிகளைக் கொண்ட நூல்________
அ) 483 ஆ) 543 இ) 583 ஈ) 643
11. தீவகம் என்னும் சொல்லுக்கு _____________ என்று பொருள்
அ) விளக்கு ஆ) பூக்கள் இ) செருக்கு ஈ) நன்மை

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.**

அன்று அவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி,
கன்று எரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி,
அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மான விறல்வேள் வயிரியம் எனினே!

12. அசைஇ – இச்சொல்லின் இலக்கணக்குறிப்பு
அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை இ) சொல்லிசை அளபெடை ஈ) செய்யுளிசை அளபெடை
13. சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்த – இவ்வடிகளில் பாக்கம் என்னும் சொல்லின் பொருள்
அ) சிற்றூர் ஆ) பேரூர் இ) கடற்கரை ஈ) மூதூர்
14. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் _________
அ) சிலப்பதிகாரம் ஆ) மலைப்படுகடாம் இ) முல்லைப்பாட்டு ஈ) காசிகாண்டம்
15. இப்பாடல் குறிப்பிடும் குறுநில மன்னன் _____________
அ) கூத்தர் ஆ) பாணர் இ) நன்னன் ஈ) பேகன்



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

## பகுதி–II ( மதிப்பெண்கள் 18 )

### பிரிவு–1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.** **(4×2=8)**

16. வசன கவிதை – குறிப்பு வரைக.
17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க:
 (அ) தேவநயப் பாவாணர் உலகத்தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர்.
 (ஆ) பூவின் தோற்றநிலை அரும்பு எனப்படும்.
18. பாலரேறு பெருஞ்சித்தனார் படைத்த நூல்களுள் எவையேனும் இரண்டின் பெயர்களை எழுதுக.
19. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
20. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழுக்கத் தொடர்களாக்குக.
21. ”பல்லார்” எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு–2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **(5×2=10)**

22. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக மலை–மாலை.
23. ஒருமை பன்மை பிழை நீக்கி எழுதுக
 (அ) புதிய படைப்புகள் உருவாக மொழிபெயர்ப்பு உதவுகின்றன.
 (ஆ) நாடு விடுதலை பெற்ற பிறகு பல நாட்டுத் தூதரங்கள் நம் நாட்டில் நிறுவப்பட்டது
24. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
25. “வேங்கை“ என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுப்படுத்திக் காட்டுக.
26. பகுபத உறுப்பிலக்கணம் – கழிந்த
27. கலைச் சொற்கள் தருக.
 (அ) Tempest (ஆ) Modern Literature
28. பழமொழிகளை நிறைவு செய்க.
 (அ) ஒரு பானை____________ (ஆ) உப்பில்லாப்____________

## பகுதி–III ( மதிப்பெண்கள் 18 )

### பிரிவு–1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்கவும்.** **(2×3=6)**

29. “புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது“.
 இதுபோல் இளம் பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்கவும்.
30. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்கு சிறப்பு செய்தது ஏன்? விளக்கம் தருக.
31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

ஒரு நாட்டு வளத்திற்கு தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறவொழுக்கங்களும் அமைந்திருக்கும். நாட்டின் தனிப்பெரும் வளத்தினாலேயே பண்டையத் தமிழ்மக்கள் தனிப்பெரும் நாகரிகத்தை உடையவராக இருந்திருக்கின்றனர். திருந்திய மக்கள் மற்ற உயிரிகளினின்றும் பிரித்துக் காட்டுவது மொழியாதலின் அதுவே ஒரு நாட்டாரின் அல்லது இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறிவதற்கும் சிறந்த வழியாகும்.

(அ) மக்களை மற்ற உயிரினின்றும் பிரித்துக் காட்டுவது எது?
(ஆ) எதனால் பண்டைத் தமிழ் மக்கள் தனிப்பெரும் நாகரிகத்தை உடையவராக இருந்திருக்கின்றனர்?
(இ) மொழி எதனை அளந்தறிவதற்குச் சிறந்த வழியாக உள்ளது?

### பிரிவு–2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்குச் மட்டுமே விடையளிக்கவும்.** **(2×3=6)**
**34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. எட்டுத்தொகை நூல்களின் பெயர்களை எழுதுக.
33. காசிக் காண்டம் உணர்த்தும் விருந்தோம்பல் செய்யுள் இல்லற ஒழுக்கங்களை கூறுக.
34. அடிபிறழாமல் எழுதுக. “புண்ணியப் புலவர்“ எனத் தொடங்கும் திருவிளையாடற் புராணம்.



AATHIYAM

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

## பிரிவு–3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்கவும். (2×3=6)**

35. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.

36. தற்குறிப்பேற்ற அணி– விளக்குக

37. "முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்" – இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

## பகுதி–IV ( மதிப்பெண்கள் 25 )

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (5×5=25)**

38. (அ) "மாளாத காதல் நோயாளன் போல் என்னும் தொடரில் உள்ள உவமை சுட்டும் செய்திகளை எழுதுக.

**அல்லது**

(ஆ) காற்றேவா! என்னும் பாரதியாரின் வசனக்கவிதை கருத்தைச் சுருக்கமாக எழுதுக.

39. (அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

**அல்லது**

(ஆ) மாநில அளவில் நடை பெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவிதை எழுதுக.



41. சேலம் மாவட்டம் ராஜி நகர் நேதாஜி தெருவில் உள்ள 18/3 ஆம் இலக்க வீட்டில் குடியிருக்கும் முருகேசன் மகள் வைதேதி கிளை நூலகத்தில் உறுப்பினராகச் சேர விரும்புகிறார். தேர்வர் தன்மை வைதேகியாகக் கருதி கொடுக்கப்பட்ட நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

42. (அ) புகையிலை பழக்கம் தடை செய்ய சமுதாயத்தில் ஒரு மாணவனாய் உனது அறிவுரைகளை குறிப்பிடுக.

**அல்லது**

(ஆ) மொழிபெயர்க்க

Malar : Devi, switch off the lights when you leave the room.
Devi : Yeah. We have to save electricity.
Malar : Our nation spends a lot of electricity for lighting up our streets in the night.
Devi : Who knows? In future our country may launch artificial moons to light our night time sky!
Malar : I have read some other countries are going to launch these types of illumination satellites near future.
Devi : Superb news! If we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas that lost power!



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

## பகுதி–V ( மதிப்பெண்கள் 24 )

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். (3×8=24)**

43. (அ) தமிழ் சொல் வளமுடையதென்றும் தமிழ்நாடு பொருள் வளமுடையதென்றும் கூறுவதற்கான காரணங்கரளை விளக்குக.

**அல்லது**

(ஆ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்தரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

44. (அ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக

**அல்லது**

(ஆ) புதிதாக வந்த மனிதனிடம் அன்னமய்யா நேசத்துடன் நடந்து கொண்டதையும் அவருக்கு உணவளித்து மகிழ்ந்தனையும் விரிவாக எழுதுக.

45. (அ) "சான்றோர் வளர்த்த தமிழ்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

**அல்லது**

(ஆ) "விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

**M RAGU B.Sc., B.Ed., PGDCA.,**
**AGATHIYAM TUITION CENTER**
**MANNAR PALAYAM PRIVU ROAD – SALEM -17**
**9092223752**

**M RAGU B.Sc., B.Ed., PGDCA., (QUESTIONS MAKING)**
**R VIGNESH B.COM., (CA)**
**V SRINIVASAN B.E.,**
**M VAIDHEKI B.A., TAMIL**
**S DEEPA B.SC.,(CS) ( TYPIST )**

AGATHIYAM



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593